# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## முதலாம் தவணை மதிப்பீட்டு பரீட்சை – 2022

| தரம் - 10 | குடியியற்கல்வி | நேரம்: 3.00 மணித்தியாலம் |
|---|---|---|

பெயர் / சுட்டெண் ..........................................................................................

**பகுதி - I**

❖ **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

01. கிரேக்க நகராட்சி அரசின் பிரதான ஆட்சி நிறுவனம்
 1) குடிமக்கள் சபை  2) பிரதிநிதிகள் சபை  3) மக்கள் மன்றம்  4) செனற் சபை

02. பின்வருவனவற்றுள் இருகட்சி முறையைப் பின்பற்றும் நாடு.
 1) பிரித்தானியா  2) இந்தியா  3) சீனா  4) வடகொரியா

03. சனநாயக சமூகமொன்றின் ஆட்சி தொடர்பான விவகாரங்களை மேற்கொள்வதற்கு மக்களுக்கு இருக்க வேண்டிய அதிகாரம்
 1) இறைமை  2) மீயுயர் அதிகாரம்
 2) அரசியலமைப்பு அதிகாரம்  4) வாக்குரிமை

04. மனிதன் தனது சமூக வாழ்க்கையை செவ்வனே கொண்டு செல்லத் தேவையான நிபந்தனைகள்
 1) உரிமைகள் எனப்படும்  2) சமத்துவம் எனப்படும்
 3) சுதந்திரம் எனப்படும்  4) கடமைகள் எனப்படும்

05. ஒரு நாட்டின் அதியுயர் சட்டமாகக் கருதப்படுவது,
 1) மனித உரிமைகள்  2) அரசியல்யாப்பு
 3) கணக்காய்வு அறிக்கை  4) தண்டனைச் சட்டக்கோவை

06. அரசொன்றின் விருப்பத்தை செயல்வடிவம் பெறச் செய்யும் முகவர்,
 1) உள்ளூராட்சி  2) அமைச்சரவை
 3) அரசாங்கம்  4) நீதிமன்றம்

07. “அரசுக்குரிய வரியைச் செலுத்துதல்” இது எவ்வகைக் கடமையாகும்?
 1) ஒழுக்கவியல் கடமை  2) சட்டரீதியான கடமை
 3) சமயக் கடமை  4) சமூகக் கடமை

08. பாராளுமன்ற அரசாங்க முறையில் நாமநிர்வாகி (பெயரளவிலான) நிர்வாகி யாரால் தெரிவு செய்யப்படுகின்றார்?
 1) ஜனாதிபதி  2) அமைச்சரவை
 3) சபாநாயகர்  4) பிரதமர்

09. இலங்கையில் அரசியல் யாப்பிற்கமைய தேர்தல் தொகுதிகளை பிரித்தொதுக்குவது,
 1) தேர்தல்கள் ஆணைக்குழு  2) பொதுச்சேவை ஆணைக்குழு
 3) எல்லை நிர்ணய ஆணைக்குழு  4) அரசாங்கசேவை ஆணைக்குழு

10. இலங்கையில் தற்போது நடைமுறையில் உள்ள தேர்தல் மாவட்டங்களின் எண்ணிக்கை.
 1) 22  2) 25  3) 24  4) 23

11. இந்தியாவில் கி.மு. 6ம் நூற்றாண்டில் குழுவாட்சி முறை நிலவிய ஆரியக்குடியேற்றம்.
 1) மல்ல  2) கோசலை  3) காசி  4) வஜ்ஜி

12. பிரதிநிதித்துவ சனநாயகத்தின் தாயகமாகக் கருதப்படும் நாடு.
 1) இத்தாலி  2) இந்தியா  3) பிரித்தானியா  4) இலங்கை

13. ஐரோப்பாவில் ஆரம்பகாலத்தில் தோற்றம் பெற்ற தேசிய அரசுகள் இரண்டைக் கொண்ட விடை எது?
1) இங்கிலாந்து, ஸ்பெயின்
2) ஸ்பெயின், இத்தாலி
3) ஜேர்மனி, இங்கிலாந்து
4) இத்தாலி, ஜேர்மனி

14. இலங்கையில் சட்டத்தை செயற்படுத்தும் நிறுவனம்.
1) சட்டத்துறை
2) நீதித்துறை
3) நிறைவேற்றுத்துறை
4) பாதுகாப்புத்துறை

15. ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் மூலம் மனித உரிமைகள் பிரகடனம் வெளியிடப்பட்ட தினமாக அமைவது,
1) 1948 டிசம்பர் 10
2) 1948 நவம்பர் 10
3) 1947 டிசம்பர் 10
4) 1947 நவம்பர் 10

16. "மகிழ்ச்சிகரமானதும் கௌரவமான வாழ்க்கையை நோக்காகக் கொண்ட அமைப்பே அரசாகும்." இக்கருத்தைக் கூறியவர்.
1) ஜீ. டி. எச். கோல்
2) பேராசிரியர் காணர்
3) அரிஸ்ரோட்டில்
4) பேராசிரியர் ஹரலட் . ஜே . லஸ்சி

17. அரசொன்றின் அடிப்படைப் பண்புகளை சரியாகக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.
1) நிலப்பரப்பு, சனத்தொகை, அரசாங்கம், இறைமை
2) நிலப்பரப்பு, அரசாங்கம், இறைமை, எதிர்க்கட்சி
3) சனத்தொகை, இறைமை, நீதித்துறை, அரசாங்கம்
4) சனத்தொகை, அரசாங்கம், இறைமை, சனாதிபதி

18. தேசிய அரசு பலமடைவதற்கு காரணமான அரசியல் சிந்தனையாளர்
1) A. V. டைசி
2) ஜீன்போடின்
3) T. B. டெயிலர்
4) ஜீ. டீ. எச். கோல்

19. ஒரு ஜனநாயக நாட்டில் வாழும் மக்கள் தங்களுக்கு விருப்பமான அரசாங்கம் ஒன்றை உருவாக்க வேண்டுமாயின் அங்கு இருக்க வேண்டிய முக்கிய விடயம்
1) தனிநபர் ஆற்றல்களை அதிகரிக்க வேண்டும்.
2) அரசாங்கத்தின் செயற்பாடுகளை விமர்சனம் செய்ய வேண்டும்.
3) அரசியல் விழிப்புணர்வுடன் மக்கள் செயற்படவேண்டும்.
4) எதிர்க்கட்சியின் பலம் சிறப்பாக இருக்க வேண்டும்.

20. ஒரு மத்திய அரசின் கீழ் ஆட்சி அதிகாரங்கள் ஒன்றுகுவிக்கப்பட்ட அரசு,
1) முதலாளித்துவ அரசு
2) ஒற்றையாட்சி அரசு
3) கூட்டாட்சி அரசு
4) பாசிச அரசு

(20 x 2 = 40 புள்ளிகள்)

## பகுதி - II

- **முதலாம் வினா கட்டாயமானது.**
- **முதலாம் வினாவுக்கும் வேறு நான்கு வினாக்களும் உட்பட ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.**

**01.** 01. சனநாயகம் பற்றி வரைவிலக்கணங்களை முன்வைத்த அறிஞர்கள் இருவரைக் குறிப்பிடுக.

02. அரசின் பிரதான வகைகள் இரண்டைக் குறிப்பிடுக.

03. மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்காகப் பின்பற்றப்படும் தேர்தல் முறைகள் இரண்டினைப் பெயரிடுக.

04. எதென்ஸ் நகர அரசின் பிரதானமான ஆட்சி நிறுவனத்தின் செயற்பாட்டில் பங்குபற்ற அனுமதிக்கப்படாத நபர்களின் இரண்டு பிரிவினரைக் குறிப்பிடுக.

05. சனநாயக ஆட்சிமுறையின் இரு பிரிவுகளைத் தருக.

06. ஒரு கட்சி முறையினுள் உள்ளடங்கும் நாடுகள் இரண்டினைக் குறிப்பிடுக.

07. இலங்கையில் தேர்தல் தொகுதிகளைப் பிரிக்கும்போது கவனத்தில் கொள்ளப்படும் நியதிகள் இரண்டினைக் குறிப்பிடுக.

08. சனநாயக நாடொன்றில் பிரஜைகளுக்கு இருக்கக்கூடிய இருவகையான கடமைகளும் எவை?

09. இலங்கையில் அரச தலையீட்டுடன் மேற்கொள்ளப்படும் சமூக நலநோன்புத் திட்டங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

10. சட்டசபையின் செயற்பாடுகள் இரண்டினைக் குறிப்பிடுக.

(10x2 = 20 புள்ளிகள்)

**02.** 01. தேசிய அரசின் பிரதான பண்புகள் இரண்டினைத் தருக. (2)

02. தேசிய அரசுகளின் தோற்றத்திற்கு வித்திட்ட காரணிகள் மூன்றினைத் தருக. (3)

03. a. ஜனநாயக ஆட்சி முறையின் பண்புகள் மூன்றினைத் தருக. (3)
b. மேற்கூறிய பண்புகளில் ஒன்றினை விளக்குக. (2)

(10 புள்ளிகள்)

**03.** 01. அரசியல் கட்சி முறைகள் இரண்டினைக் குறிப்பிடுக. (2)

02. அரசியல்கட்சி முறையின் அனுகூலங்கள் மூன்றினைத் தருக. (3)

03. a. ஜனநாயக ஆட்சி வெற்றி பெறுவதற்கு எதிர்க்கட்சியின் பொறுப்புக்கள் மூன்றினைத் தருக. (3)
b. அவற்றுள் ஒன்றினை விளக்குக. (2)

(10 புள்ளிகள்)

**04.** 01. அரசியல் யாப்பொன்றில் உள்ளடக்கப்படும் பொதுவான விடயங்கள் இரண்டினைத் தருக. (2)

02. இலங்கையில் வாக்காளர்களுக்கு தமது வாக்கைப் பயன்படுத்தக்கூடிய மூன்று தேர்தல் வாய்ப்புக்களைக் குறிப்பிடுக. (3)

03. a. ஜனநாயக சமூகத்தில் சுதந்திர ஊடகங்களால் நிறைவேற்றப்பட வேண்டிய பொறுப்புக்கள் மூன்றினைத் தருக. (3)
b. அவற்றுள் ஒன்றினைச் சுருக்கமாக விளக்குக. (2)

(10 புள்ளிகள்)

**05.** 01. அரசாங்கத்தின் வகைகள் இரண்டினைத் தருக. (2)

02. அரசாங்கத்தின் மூன்று துறைகளைக் குறிப்பிடுக. (3)

03. a. அரசின் பிரஜைகள் மீதான பொறுப்புக்கள் மூன்றினைக் குறிப்பிடுக. (3)
b. அவற்றுள் ஒரு பொறுப்பினை சுருக்கமாக விளக்குக. (2)

(10 புள்ளிகள்)

**06.** 01. ஜனநாயக நாடொன்றில் பிரஜைகளுக்கு இருக்கக்கூடிய இரு வகையான பொறுப்புக்களையும் தருக. (2)

02. ஜனநாயக ஆட்சிமுறை வெற்றிபெற அவசியமான காரணிகள் மூன்றினைத் தருக. (3)

03. a. ஜனநாயக ஆட்சி முறையின் முக்கியத்துவங்கள் மூன்றினைக் குறிப்பிடுக. (3)
b. மேற்கூறிய முக்கியத்துவங்களில் ஒன்றினை விளக்குக. (2)

(10 புள்ளிகள்)